# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

முறையீட்டு மனு எண்: 150/மா/2017
ஆணை நாள்: 10.9.2019

திரு. எம். செய்யது முகம்மது,
51/17A, சுங்கம்பள்ளி வாசல் தெரு,
மதுரை – 625 001. – **முறையீட்டு மனுதாரர்**

துணை ஆணையர் மற்றும் பிற அலுவலர்கள்,
மதுரை மாநகராட்சி. – **எதிர்மனுதாரர்கள்**

மதுரை மாநகராட்சி, சுங்கம்பள்ளி வாசல் தெரு, கதவு எண். 51/17A என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். செய்யது முகம்மது என்பவரின் 8.7.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.150/2017 என எண்ணிடப்பட்டு, முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இம்முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாநகராட்சி, சுங்கம்பள்ளி வாசல் தெரு, கதவு எண். 51/17A என்ற முகவரியில் வசிக்கும் திரு. எம். செய்யது முகம்மது என்பவர் தனது 8.7.2017 நாளிட்ட முறையீட்டு மனுவில், தனக்கு சொந்தமான சர்வே எண். 398/1, 398/2 மற்றும் சர்வே எண். 398/3 ஆகியவற்றில் உள்ள சொத்துக்களுக்கான பட்டா தனது பெயரில் உள்ளது என்றும், மேற்படி சொத்து சம்மந்தமான வரிவதிப்பு மதுரை மாநகராட்சியின் வரிவிதிப்பில் தனது பெயரில் உள்ளது என்றும், மேற்படி சொத்தில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களை அகற்றவும், தனக்கு பாத்தியமான மேற்படி சர்வே எண்ணின்படி பத்திரப்பதிவு செய்துள்ள பத்திரங்களை செல்லாது என அறிவிக்கக்கோரி மதுரை

மூன்றாவது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 891 of 2015 என்ற வழக்கும், மதுரை 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 147 of 2015 என்ற வழக்கும் நடந்து கொண்டிருக்கும் நிலையிலும் எனக்கு பாத்தியமான சொத்துக்களுக்கு 9 வரிவிதிப்புகள் செய்யப்பட்டு வரிவிதிப்புகள் செலுத்திக்கொண்டிருக்கும் நிலையிலும் மதுரை மாநகராட்சியில் A2 எழுத்தராக பணிபுரியும் பாலசுப்பிரமணியன் ஆலோசனையின்படி தனக்கு பாத்தியமான சர்வே எண்களில் பத்திரப்பதிவு செய்துள்ளவர்கள் வழக்கிற்கு ஆவணம் தேவைப்படுவதால் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேற்படி பத்திரப்பதிவு செய்துள்ள இருவர், நீதிமன்றம் மூலம் நீதிமன்ற வழிகாட்டுதல் பெற்று அனைத்து 9 வரி விதிப்புகளையும் பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றும், தனது சொத்து வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதால் தனது பெயரில் உள்ள வரிவிதிப்பை பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று தெரிவித்தும், தன் பெயரில் உள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி சொத்து சம்மந்தமாக 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள IA No. 315 /2016 in O.S.No.147 /2015ல் மதுரை மாநகராட்சி தாக்கல் செய்துள்ள உறுதி ஆவணத்தில் வரிவிதிப்புகள் திரு. எம். செய்யது முகம்மது பெயரில் உள்ளதாகவும், பட்டா தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பது தெரிந்தும் அவசர கதியில் பணம் பெற்றுக்கொண்டு பெயர் மாற்றம் செய்த மதுரை மாநகராட்சி அலுவலரான துணை ஆணையாளர், உதவி ஆணையர் (பொறுப்பு), திரு. நாராயணன் மற்றும் அலுவலர் பாலசுப்பிரமணியம் (A2) ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், தான் தொடுத்துள்ள இரு வழக்குகளின் இறுதித்தீர்ப்பு வழங்கும் வரை பழைய நிலையில் தனது பெயரிலே வரிவிதிப்பு தொடர உத்தரவிட வேண்டும் என்றும் புதிதாக பெயர் மாற்றம் செய்த வரிவிதிப்பை ரத்து செய்ய வேண்டும் என்றும், முறைகேடு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மீதான அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 12.07.2017 தேதியிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது. மதுரை மாநகராட்சி துணை ஆணையர் தனது 10.8.2017 நாளிட்ட அறிக்கையில், மதுரை மாநகராட்சி, மண்டலம் 4, வார்டு 85, தெற்கு ஆவணி மூல வீதி வரிவிதிப்பு எண்கள். 71192 முதல் 71201 முடிய வரிவிதிப்புகளை திரு. எம். செய்யது முகம்மது என்ற பெயரிலிருந்து பதிவுத்துறை மூலமாக பதிவு செய்யப்பட்ட ஆவணங்களுக்குரிய சுவான்தார்கள் பெயருக்கு மாற்றம் செய்தது தொடர்பாக

திரு. எம். செய்யது முகம்மது என்பவரிடம் உரிமை பாத்தியம் குறித்த உரிய ஆவணங்கள் நகல்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் அதன் அடிப்படையில் உண்மையான உரிமையாளரை கண்டறிந்து உரிய ஆணை பிறப்பிக்க ஏதுவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால் திரு. எம். செய்யது முகம்மது தனது மனுவில் தெரிவித்த மதுரை, தெற்கு ஆவணி மூல வீதி, வார்டு 85 வரிவிதிப்பு எண். 71192 முதல் 71201 வரையிலான வரிவிதிப்புகளுக்குரிய சொத்துக்கள் சம்மந்தமாக, கதவு எண், வரிவிதிப்பு எண், ஆகியவைகள் இடம் பெற்ற அவர்களின் சொத்துரிமை குறித்த ஆவணம் ஏதும் சமர்ப்பிக்கவில்லை என்றும் மேலும் சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை வழக்கு எண். C.R.P. No. 816 /2005 நாள்: 25.04.2006 தீர்ப்பில் கீழ்கண்டவாறு ஆணையிடப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

"If ultimately the Petitioner (Syed Mohammed) succeeds in the main suit can have all the remedies including the restoration of the Property".

"The Petitioner (Syed Mohammed) who has come to Court should satisfy the Court the Prima facie that he is the descendent of Nawab of Arcot and Wallajah in whose favour the land".

மாநகராட்சி நிலை வழக்கறிஞர் கருத்துருவிலும் மேற்படி வரிவிதிப்புகள் சம்மந்தமான சொத்துக்களின் உரிமைக் குறித்து உரிமையியல் நீதிமன்றம் மூலமாக உரிய பரிகாரம் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி சொத்துரிமை குறித்து திரு. எம். செய்யது முகம்மது என்பவரால் மதுரை கீழமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு எண். 364/2003 IA No.1042/2009 ல் 18.3.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

"Therefore the forgoing reasons this Court comes to the conclusion that there is no merit in the application. In the result this Petition is dismissed".

மேலும் மாநில தகவல் ஆணையம் வழக்கு எண். 2115/D/14 ல் 09.12.2015 அன்று வழங்கிய ஆணையில் வரிவிதிப்பு ரத்து செய்வது, பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காண திரு. எம். செய்யது முகம்மதுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். எனவே வரிவிதிப்பு எண். 71192 முதல் 71201 முடிய வரிவிதிப்புகளுக்குரிய சொத்துக்கள் மீது தனது உரிமை குறித்த ஆவணங்கள்

திரு. எம். செய்யது முகம்மது அவர்களால் சமர்ப்பிக்காத நிலையில் தற்பொழுதிய சுவான்தாரர்கள் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் உரிமை பாத்தியம் குறித்த பதிவுத் துறை ஆவணமாக இருந்ததால் மேற்படி ஆவண அடிப்படையில் மனுதாக்கல் செய்த நபரின் கோரிக்கைபடி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதை, திரு. எம். செய்யது முகம்மது இடர்வுற்றதாக கருதும் பட்சத்தில், சென்னை உயர்நீதிமன்றம் மதுரைக் கிளை வழக்கு எண். CRP No. 816/2005 ல் 25.04.2006 அன்று வழங்கிய வழிகாட்டுதல் தீர்ப்பின் படி சொத்துரிமை குறித்து கீழமை நீதிமன்றம் மூலமாக பெற்று வரும் தீர்ப்பின் அடிப்படையில் மீது மேற்படி வரிவிதிப்பு பெயர் மாற்றம் குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 7.8.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி அளித்த தனது வாக்குமூலத்தில் மதுரை தெற்கு ஆவணி மூல வீதியில் சர்வே எண்.398/1,2,3 ஆகிய எண்களில் உள்ள 14 கடைகள் தன் பொறுப்பில் இருந்தது என்றும், மதுரை மாநகராட்சி வரிவிதிப்பில் தன்னுடைய பெயரிலும், 2014 ஆம் ஆண்டு முதல் பட்டா தனது பெயரிலும் உள்ளது என்றும் அதனுடைய பட்டா எண்.330/14 என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இந்த சொத்து ஆற்காடு நவாப் வகையறாவான வாலாஜா கர்னாடிக் நவாப் அவர்களின் மூதாதையர் சொத்து என்றும், நவாப் அலிகான் என்பவர் தன் பெயருக்கு 1997 ஆம் ஆண்டு பொது அதிகாரம் மூலம் பத்திரம் பதிவு செய்து தன்னை முகவராக நியமித்துள்ளார் என்றும் அன்று முதல் மதுரை தெற்கு ஆவணி மூலவீதியில் உள்ள மேலே சொல்லப்பட்ட மூன்று சர்வே நெம்பர்களில் உள்ள 14 கடைகளும் தன்னுடைய பொறுப்பில் உள்ளது என்றும், ஒவ்வொரு கடையும் ரூ.3000/- முதல் ரூ.7000/- வரை வாடகைக்கு கொடுத்திருந்ததாகவும், ஆவண எண்.347/89 திருமதி. ஆதிலட்சுமி அம்மாள் என்பவர் எழுதி கொடுத்த ஒரு உயில் ஆவணம் என்றும், தன்னிடமுள்ள ஆவணங்களை முழுவதும் பரிசீலித்து தனது தெளிவான வாக்குமூலத்தை அளிக்கிறேன் என்றும் அதற்காக 15 நாட்கள் அவகாசம் தேவைப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். அதன்படி, முறையீட்டு மனுதாரர் 19.3.2018 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு அளித்த வாக்குமூலத்தில் தனக்கு சொந்தமான கடைகள் தெற்கு ஆவணி மூல வீதியில் உள்ளது என்றும், அந்த இடங்களில் திரு. வரதராஜன் மற்றும் 34 நபர்கள் ஆக மொத்தம் 35 நபர்கள் ஆக்கிரமித்து உள்ளார்கள் என்றும், இதுகுறித்து மதுரை மூன்றாவது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு

எண். 891/2015 ன்படி வழக்கு நடந்து வருகிறது என்றும், வேறு ஒரு வழக்கு 5வது கூடுதல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 147/2015 தனது மகன்கள் திரு. முகமது முபாரக், திரு. ராஜா முகம்மது ஆகியு இருவரும் திரு. வரதராஜன் மற்றும் 9 நபர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்றும், வழக்கில் உள்ள இடங்களுக்கு தனது பெயரில் வரி செலுத்தி வருவதாகவும், கடைசியாக 2016 ஆம் ஆண்டு, வரிவிதிப்பு எண். 71192 ன்படி வரி செலுத்தியுள்ளதாகவும், வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது 2013 ஆம் ஆண்டு மாநகராட்சியில் இருந்து ஒரு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், அதில் பெயர் மாற்றம் செய்ய ஒரு மனு வந்துள்ளது என்றும், இச்சொத்துக்கள் சம்மந்தமாக தங்களிடம் உள்ள ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது என்றும், நீதிமன்ற ஆணை வந்த பின்பு மாற்றங்கள் செய்யலாம், தற்பொழுது எந்த மாற்றமும் செய்ய வேண்டாம் என குறிப்பிட்டு மாநகராட்சி ஆணையருக்கு பதிவஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டது என்றும், தெரிவித்தார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 29.5.2019 நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் சொத்துரிமை குறித்த வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் இருந்து வரும் நிலையில் சொத்துவரி பெயர் மாற்றம் எதன் அடிப்படையில் செய்யப்பட்டது என்ற விளக்கத்தினை அளிக்க மதுரை மாநகராட்சி துணை ஆணையருக்கும் மற்றும் மதுரை மாநகராட்சி 4வது மண்டல உதவி ஆணையருக்கும் ஆணையிடப்பட்டது.

மதுரை மாநகராட்சி 4வது மண்டல அலுவலர் தனது 17.06.2019 நாளிட்ட அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு. எம். செய்யது முகம்மது என்பவர் தனது சொத்துரிமை குறித்த ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்காத நிலையிலும், முந்தைய நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் தற்போதுள்ள சுவான்தாரர்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் மேற்படி சொத்து சம்மந்தமாக மதுரை 3வது சார்பு நீதிமன்றத்தில் முறையீட்டு மனுதாரருக்கும் மற்றும் திரு. வரதராஜன் மற்றும் 34 நபர்களுக்கும் இடையே அசல் வழக்கு எண். 891 / 2015 ன்படி ஒரு வழக்கும், முறையீட்டு மனுதாராது மகன்கள் திரு. முகம்மது முபாரக் மற்றும் திரு. ராஜா முகம்மது ஆகிய இருவரும் திரு. வரதராஜன் மற்றும் 9 நபர்கள் மீது மதுரை 5வது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண். 147/2015 ன்படி

வழக்கு தொடரப்பட்டு இவர்களுடையே வழக்கு நடைபெற்று வருகிறதென்றும், இந்த வழக்குகளில் மாநகராட்சி சேர்க்கப்படவில்லை என்றும், மனுதாரரின் பெயர் மாற்ற ஆட்சேபனை குறித்து அவ்வலுவலகத்தில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், மேற்குறிப்பிட்ட வழக்குகளில் தீர்ப்பாணை வரப்பெறப்பட்டவுடன், தீர்ப்பாணையில் மாநகராட்சியை பொறுப்பாக்கி நீதிமன்றம் உத்தரவு ஏதும் பிறப்பிக்கும் பட்சத்தில் அவ்வுத்தரவினை மாநகராட்சி நிறைவேற்றும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீடு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி துணை / உதவி ஆணையரின் அறிக்கைகள் ஆகியவை அனைத்தும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. இந்நேர்வில் வழக்கிடை சொத்துகளின் உரிமை குறித்து நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ளது. அவ்வழக்குகளில் மாநகராட்சிக்கு எதிராக சொத்துவரி மாற்றம் குறித்து தடையாணை ஏதும் பெறவில்லை. இந்நிலையில், மாநகராட்சி கோரிய சொத்துரிமை ஆவணங்களை முறையீட்டு மனுதாரரால் சமர்ப்பிக்கப்படாத நிலையில் நீதிமன்ற தீர்ப்புகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் மாநகராட்சியால் சொத்துவரி மாற்றம் செய்யப்பட்டதை ஒரு முறைகேடாக கருத இயலாது. மேலும், 2014 - ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனினும் இம்முறைமன்ற நடுவம் விசாரணை மேற்கொண்டு எந்த ஒரு ஆணையும் பிறப்பிக்க இயலாது. இந்நேர்வில், மேற்படி வழக்குகளில் வழங்கப்படும் நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 10–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1. திரு. எம். செய்யது முகம்மது,
51/17A, சுங்கம்பள்ளி வாசல் தெரு,
மதுரை – 625 001.

2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

3. துணை ஆணையர்,
மதுரை மாநகராட்சி, மதுரை.

நகல்
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3
இ.கோ./ உதிரிகள்